# போர்வாள்


"போர்வாள்"

சந்தா விபரம்

★

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 0 |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 16 30—7—49 சனிக்கிழமை | வீச்சு 48


## தமிழ், மூன்றும் வகுப்புப் பிரயாணி!




"சர்க்காரின் உத்தரவுப்படி, தமிழ்நாட்டு ரயில்வே ஸ்டேஷன்களின் பெயர்கள் முதலில் ஹிந்தியிலும், இரண்டாவதாக ஆங்கிலத்திலும், மூன்றுவதாகவும் கடைசியாகவும் தமிழிலும் எழுதப்பட்டிருக்கிறது"—பத்திரிகைச் செய்தி

அப்படியானால், இந்தியை சொகுசான முதல் வகுப்புப் பிரயாணியாகவும், தமிழை கேவலம் மூன்றாவது வகுப்புப் பிரயாணியாகவும் கருதிவிட்டார்கள் போலிருக்கிறது காங்கிரஸ் சர்க்கார்! தமிழே! உன் கதி இப்படியா ஆகவேண்டும்!

# புரட்சி பிறந்த கதை

(வா. செ. குலோத்துங்கன்)

கடலின் ஆழத்தில் கிடக்கும் அழகிய முத்துக்கள் அணியாகவும் அழகுப் பொருளாகவும் பயன்படலாம். ஆனால் அதன் மேற்பரப்பில் கிடைக்கும் மீனினங்கள் தான் வயிற்றுக்கு உணவாகின்றன!

பாதாளம் சென்று எடுக்கும் பசும் பொன் காதுக்கு அணியாகலாம்! கழுத்துக்கு மாலையாகலாம். ஆனால் கடும்பசிக்கு மருந்தாக முடியாது. அதற்குப் பயன்படுவது அதன் மேற்பரப்பில் விளையும் பல்வகை உணவுப்பொருள்கள்தான்.

இலக்கியப் புலவர்களும், கவிஞர்களும், தத்துவ ஞானிகளும் கிடைப்பதற்கு அரியவர்களாயும், பெருமைக் குரியவர்களாயும் இருக்கலாம். ஆனால் வாழ்வின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய அவர்களால் முடியாது. அதைச் செய்பவர்கள் சாதாரணப் பொதுமக்கள்தான்—உழைப்பாளிகள்தான்! எனவே அவர்கள்தான் நாட்டின் இரத்தமும் சதையுமாகின்றனர்!

நிலவளம் மட்டும் போதாது நாட்டிலே பஞ்சம் நடமாடாது தடுக்க! நாட்டின் முதுகெலும்புகளான தொழிலாளிகளின் வாழ்வும் "வளம்" பெறவேண்டும். உறங்கும் சோம்பேறிக் கூட்டம் உண்டு கொழுக்க, இரவும் பகலும் உழைக்கும் மக்கள் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இல்லமும் இன்றித்தவித்து, வெயிலிலே காய்ந்து, மழையிலே நனைந்து, பனியிலே நடுங்கி, பஞ்சத்திலடிபட்டு, ஒட்டிய வயிறும், உலர்ந்த நெஞ்சமும், குழி விழுந்த கண்களும், குன்றிய உணர்ச்சியும், குமுறும் நெஞ்சமுமாக, வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலே போராடிக்கொண்டு தங்கள் உழைப்பால் ஊதியம்பெற்ற கூட்டத்தைப் பார்த்து,

> "நீங்கள் உழைக்காது இன்பவாழ்வு வாழ்கிறீர்களே என்பதுபற்றி எங்கட்குக் கவலை இல்லை, ஆனால் உழைத்தும் எங்கட்கு-அறுசுவை உணவு அல்ல — அரைவயிற்றுக் கஞ்சிகூட இல்லையே!.."

என்ற, சட்டவரம்புக்கு உட்பட்ட' நீதியின் எல்லையை மீறாத, ஈனக் குரல் கிளப்புகின்றனர். ஆணவத்தால் இரக்க ஊற்று முடைபட்டு அறிவுக்கண் மூடப்பட்டுக்கிடக்கும் அதிகார இனத்தின் அடக்குமுறைத் தீ—அவர்கள்மீது பாயும்போது அது எளிதில் பற்றிக்கொண்டு புரட்சித்தீயாக எரிகிறது!

வயிற்றிலெழும் பசித்தீயை அடக்குமுறைப் புயல் வளர்த்து, மனத்திலே கொழுந்துவிட்டெரியும் புரட்சித்தீயாக மாற்றுகிறது! இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலேதானே அந்தந்த நாடுகளில் பல்வகைப் புரட்சிகள் தோன்றியுள்ளன! அப்படித் தோன்றியதுதான், **ரஷ்ய நாட்டு அக்டோபர் புரட்சி!**

ஜார் ஆட்சியின் கீழ் இரஷ்யா கற்சுவர்களும் கம்பிகளும் இல்லாத ஒரு சிறை! அந்நாளில் அங்கு பொதுமக்கள் உள்ளத்திலே "புதுமைக்கருத்துக்கள்" புகாவண்ணம் மதம் என்ற கதவும், சாத்திரம் என்ற தாழ்ப்பாளும், அடக்குமுறை என்ற பலமான பூட்டும் உண்டு. ஏர்முனை பிடிக்கும் கைகளுக்கு விலங்கு இல்லை. ஆனால் எழுதுகோல் பிடிக்கும் கைகட்கு விலங்கு உண்டு! எழுதும் ஆசிரியர்களைவிட எழுதப்பட்ட நூலில் எங்காவது புரட்சிவாடை வீசுகிறதா என்று ஆய்ந்து பார்க்க அமர்த்தப்பட்ட அதிகாரிகளின் தொகை அதிகம். புதிய கருத்துக்கள் கொண்ட நூலைக்கண்டால் அரசாங்கம் நடுங்குகிறது—**நமது அமைச்சர்கள் நாடகங்களைக் கண்டு நடுங்குவது போல!** அடிமைகட்குக் கால்களில் விலங்கு உண்டு.

அன்று ரஷ்யாவில் நிலச்சுவான்தார்கள் ஆடின பேயாட்டம் இருக்கிறதே அது சொல்லிலும் எழுத்திலும் அடங்குவதல்ல. ஏழை உழவர்களின் உரிமையைப் பறித்தார்கள். அவர்களுடைய உழைப்பை உறிஞ்சினார்கள்! ஒட்டிய உடலிலே ஊசலாடிக்கொண்டிருக்கும் உயிர்தான் மீதம்! அதற்காவது ஆபத்து இல்லை என்ற நிச்சயம் உண்டா? அதுவும் இல்லை. எப்பொழுதும், எந்த நேரத்திலும் துப்பாக்கிக் குண்டு பாயலாம்!

பசி, பிணி, சாட்டையடி, தோல் போர்த்த எலும்புக்கூடு, கவலைக் கண்ணீர் — இதுதான் அவர்களுடைய நிரந்தரச்சொத்து. பாவம்! அவர்கள் வாழவில்லை. சாகவும் இல்லை. இரண்டுக்கும் இடையே சித்திரவதை செய்யப்பட்டனர்! இதுதான் ஜார்காலத்து இரஷ்யாவில் தொழிலாளர் நிலை!

* * *

நிலத்துக்குக்கொடுக்கவேண்டிய குத்தகை ஒருவனிடமிருந்து இன்னும் வரவில்லையா? சரி! குடும்பத்தோடு அவனை இழுத்துக் கொண்டு வா! ஏலம்போடு! அவனை ஒருவன், அவன் மனைவியை ஒருவன், மகனை ஒருவன், மகளை ஒருவன் ஏலத்தில் எடுப்பான்! அல்லது எல்லோரையுமே ஒருவன் எடுப்பான்! வந்த பணம் இரண்டு வெள்ளிக்கிண்ணங்களை மதுவால் நிரப்பும்! அல்லது மந்தகாச நகையினள், மதிமுகத்தினள், மயில் நிகர் சாயலாள் —ஆகிய மனோகரிகளின் கழுத்தையோ, காதையோ அணியாய் அழகு செய்யும்!

அங்கே சந்தையில் ஏழையின் நிலை அப்படி! ஆனால், கட்டிலின் நிலையோ!...!—காரிகையின் கையிலே அழகிய கிண்ணம், கிண்ணத்திலே மது, கண்ணிலே கவர்ச்சி, இதழிலே தேன், கருத்திலே காமம், பேச்சிலே இளமை புணர்ச்சியின் வேகம், சிரிப்பு, எக்காளம், சீமானுக்கோ மதுதரும் மயக்கமும் மங்கைதரும் மயக்கமுமாகத் தன்னை மறந்த நிலை, ஒரே களியாட்டம்! ஒரே ஆனந்தம்! குடிக்க மது! குலவ மங்கை! களிப்பிற்குப் பஞ்சமா என்ன? இது ஜார்காலத்து இரஷ்யாவில் "பிரபுக்கள்" வாழ்ந்த இன்ப வாழ்வு!

பேரிருமல் கிருமிகள், பிணியாளியின் உடலின் காற்றுப்பையை நுரையீரலை உண்டு வாழுகின்றன! இந்த முதலாளிக் கிருமிகள் சமூகத்தின் ஆணிவேரான ஏழைகளை உண்டு கொழுக்கின்றன!

கன்னலினும் இன் மொழியினள்

(11-ம் பக்கம் பார்க்க)

# அன்று அப்படி! இன்று இப்படி!

★

## "விடுதலை"யின் விபரீதப் போக்கு!

★

"ஒரு தாரமிருக்க மறு தாரங்களை ஏற்றுக் கொள்பவர்களும், வீட்டிலே இளம் விதவைகளைப் பூட்டிவைத்திருப்பவர்களும், சிறு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் கிழவர்களும்,........... வேறு ஜாதியில் மணம் செய்து கொண்டால் வேங்கைபோலப் பாயும் வீணர்களும், பெண் உரிமையைப்பற்றி கரடியாகக் கதறுவார்கள்! பேனா முனை ஒடியக் கிறுக்குவார்கள்! இவர்களைவிடப் பித்தலாட்டக்காரர்கள், போலி சீர்திருத்தவாதிகள், வேறு யாராவது இருக்க முடியுமா?"

அருமையான கேள்வி என்பீர்கள் நீங்கள்! ஆம், அற்புதமான கேள்வி என்கிறோம் நாம்!

நியாயமான கேள்வி என்பீர்கள் நீங்கள்! ஆம் ஆம் மிக நேர்மையான கேள்வி என்கிறோம் நாம்!

உன்னதமான கேள்வி என்று அழுத்தந் திருத்தமாக உரைத்திடுவீர்கள் நீங்கள்! உண்மை உண்மை நிச்சயம் கேட்கப்படவேண்டிய நல்லதோர் கேள்வி என்பதை ஒளிவு மறைவு இன்றிஒப்புக்கொள்கிறோம் நாம்!

கேள்வி கேட்கப்பட்டிருக்கும் தோரணை மிகக் காரமானது, 'நெடி' மிகுந்தது பச்சை மிளகாயை நறுக்கியெடுத்துத் தின்னத் தரும் தன்மை போல்வது என்றும் கேட்கப்பட்டிருக்கும் கேள்வியின் உட்கருத்து மிக மிகச் சிறந்தது, சீரியது, செவ்வியது என்பீர்கள் நீங்கள்! உங்கள் எண்ணத்தை வார்த்தைக்கு வார்த்தை, எழுத்துக்கு எழுத்து, ஒப்புக்கொள்கிறோம் நாம்!

நீங்களும் நாங்களும் மட்டுமா, நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் யாருமேதான் ஒப்புக்கொள்வர் இந்தக் கேள்வி கட்டாயம் கேட்கப்படவேண்டியதோர் சிறந்த கேள்வி என்பதை! யார் யார் நாட்டிலே சீர்திருத்த உணர்ச்சி காட்டாற்று வெள்ளம்போல பொங்கிப் பாய வேண்டும் என்று விரும்புகிறார்களோ, யார் யார் புரட்சி ஆர்வமும் [illegible]மையில் நாட்டமும் எங்கணும் விரைவில் தோன்றிப் பரவுதல் வேண்டும் என்று மனமார ஆசைப்படுகிறார்களோ; யார் யார் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னைக் கொளுத்துவோம் என்று பகுத்தறிவுக்கீதம்பாடி, சமரசமுரசு கொட்டுகிறார்களோ, யார் யாருடைய உள்ளத்திலே பெண்ணடிமை என்னும் பெருங் கொடுமையை வெட்டிச் சாய்க்கவேண்டும் என்ற வீர உணர்ச்சி தவழ்கிறதோ, யார் யாருக்கு நம்மைப் பெற்றெடுத்த மாதர் குலம் அலட்சியம் என்னும் இருட்டறையில் தள்ளி வதைக்கப் படுவதுகண்டு உள்ளம் குமுறுகிறதோ, அவர்கள் அத்தனை பேரும், இந்தக் கேள்வியை, நியாயம் நியாயம் என்று கூறி, மீண்டும் மீண்டும் ஒலிக்கத் தவறமாட்டார்கள்! உண்மைச் சீர்திருத்தவாதிகளாய் இருப்போர் ஒவ்வொருவரும், தம் தம் மனம் எனும் ஏட்டில், நேர்மை எனும் எழுதுகோல் கொண்டு, நிச்சயம் தீட்டிவைத்துக் கொள்ள வேண்டிய, நல்ல—மிக நல்ல—கேள்வி இது!

ஆம்! இந்தக் கேள்வி சிறந்தது, சீரியது, செவ்வையானது, நாட்டு நலத்துக்குத் தேவையானது; நல்லோர் அனைவராலும் கேட்கப்பட வேண்டியது என்பதை நல்லறிவாளர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர்! ஆனால் "விடுதலை"—இன்றைய "விடுதலை"—இப்போது வெளிவரும் "விடுதலை"—பெரியாரின் பொருந்தாத் திருமண ஏற்பாடு தமிழ் நாட்டு அரசியல் வானில் உலவத் தொடங்கிய பின்னர் வந்துகொண்டிருக்கும் "விடுதலை"—இந்தப் "புது" விடுதலை—இந்தக் கேள்வியை ஒப்புக்கொள்ளாது!

இந்தக் கேள்வியை ஒப்புக்கொள்ளாது என்பது மட்டுமா, இத்தகு கேள்வியை எழுப்புவோரைக் கண்டாலே வேங்கையையோ விரியனையோ கண்டதுபோல அலறித் துடிக்கும் இன்றைய "விடுதலை"!

அலறித் துடிப்பதோடாவது நிற்குமா, அதுதான் இல்லை, இப்படியெல்லாம் கேட்பவர்களை, விஷமிகள் என்று வீராவேசத்துடன் தூற்றும்; சுயநலமிகள் என்று சடசடவென ஏசும்; உளறிக் கூத்தாடும் உன்மத்தர்கள் என்று உரத்த குரலில் உலகறியக் கூவும்; கேள்வியா கேட்கிறீர்கள், சதிகாரர்களே என்று, இன்ன சொல்லை இன்ன இடத்தில்தான் பயன் படுத்தவேண்டும் என்ற இடம் பொருள் ஏவலைக் கூட மறந்துவிட்டு வசைமொழிகளை வீசும்.

"விடுதலை" இதழின் இன்றைய அகராதிப்படி இளங்குமரியைத் திருமணம் செய்து கொள்ளும் வயோதிகரைக் கண்டிப்பவர்கள், அத்தனை பேரும் விஷமிகள்! சுயநலமிகள்! உளறிக் கூத்தாடும் உன்மத்தர்கள்! சதிகாரர்கள்!

விசித்திரமான அகராதியாக இருக்கிறதே என்பீர்கள்! ஆமாம்! விசித்திரமான அகராதிதான்! விசித்திரமான அகராதி மட்டுமா, வேதனையான அகராதி கூட! ஆனால் என் செய்வது! இத்தன்மை மிகு அகராதிதான் இந்நாளில் "விடுதலை"யின் கரத்திலே தவழ்கிறது!

"விடுதலை"யின் உள்ளத்திலே இவ்வளவு எரிச்சலை உண்டுபண்ணக்கூடிய அந்த உன்னதமான

(10-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை :

# அதே கற்பகம்!

(குணச்சந்திரன்)

மாலை. கல்லூரியை விட்டு விட்டார்கள். மாணவர்கள், மாணவிகள் தங்கள் புத்தகங்களுடன் ஏதேதோ பேசிக் கொண்டே வெளி வந்து கொண்டிருந்தார்கள். கல்லூரி சம்பந்தமான பேச்சு; கழக சம்பந்தமான வாதம்; பாட சம்பந்தமான படபடத்த பேச்சு! ஆசான்களின் குறைகள்; பெண்களின் நிறைகள்—எல்லாம் பேசிக் கொண்டே வந்தனர் மாணவர்கள். மாணவிகள்—வெட்கப்பட்டுக் கொண்டோ அல்லது பேச விஷயம் கிடைக்காமலோ—பேசாமல், ஒரு சிலர் மட்டிலும் 'குசு, குசு' வென்று பேசிக் கொண்டு விரு விரு வென்று சென்றனர்.

அவர்கள் வீடுசெல்ல கார், மோட்டார்சைக்கில், சைக்கில், கால்கள், மோட்டார் எல்லாம் உதவின. கல்லூரியில் இருக்கும் போது அவர்களுக்குள்—படிப்பொன்றைத் தவிர—ஏற்றத் தாழ்வு இல்லை. வெளி வந்ததும் அவர்களுடைய ஏற்றத்தாழ்வை அவரவர்கள் சென்ற முறைகள் எடுத்துக்காட்டின.

சாலையின் ஓரமாக ஒரு மாணவி—கற்பகம்—சென்று கொண்டிருந்தாள்.

மாணிக்கத்திற்கு—இவனும் ஒரு கல்லூரி மாணவன்—மோட்டார் சைக்கில் உண்டு. அவன் அதில் நாள்தோறும் யாராவது ஒரு மாணவனை ஏற்றிச் செல்வதுண்டு. அன்று அவனுடன் அடிக்கடி வரும் சந்திரனுக்காக திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே, சைக்கில் மோட்டாரில் சென்றுகொண்டிருந்தான். திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றதால், பாதையோரமாக புத்தகக் குவியலை மார்பின்மேல் அணைத்துக்கொண்டு சென்று கொண்டிருந்த கற்பகத்தின் முழங்கையில் மாணிக்கத்தின் கையும் கண்ணும் போனவாறு திருப்பிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிலின் கைத்திருப்பின் பிடி இடிபட்டு, அவள் கையிலிருந்த அவ்வளவு புத்தகங்களும் கீழே சிதறின. அவள் திடுக்கிட்டாள்; அவன்பிரமித்து விட்டான். மன்னிப்பு கோரியவாறே அவன், மோட்டார் சைக்கிலை விட்டு இறங்கி புத்தகங்களைப்பொறுக்கிக் கொடுத்து 'ஸாரி, மாடம்" என்றான்.

அவள் முகத்தை 'உம்' மென்று வைத்துக் கொண்டு வேகமாக நடந்து சென்றுவிட்டாள்; அவன் அவளையே கவனித்தவாறு—அங்கேயே—சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தான்.

மாலை மூன்று மணி! ஆங்கிலப் படம் திரையிடும் காட்சிச் சாலை கூட்டம் அளவிறந்து இருக்கிறது. ஒழுங்கானவரிசை, அனுமதிச் சீட்டு வாங்க நிற்பதோடு, வெய்யில் தரும் விடமின் 'பி' யையும் தங்கள் பகுதித் திறந்த உடலின் மூலம் பெற்றுக் கொண்டிருந்தார்கள். நேரம் நெருங்கியது; வரிசை நகர்ந்தது! தலைக்கொரு சீட்டு வாங்கினார்கள்; வாயிலில் காட்டிக் கிழித்து உள்ளே சென்றார்கள். உட்கார்ந்து கொண்டே யிருந்தார்கள். அன்று மாணிக்கம் பாடம் நடந்துக்கொண்டிருக்கும் பொழுதே நழுவி, சீட்டு வாங்கி காட்சிச் சாலையிலும் புகுந்துவிட்டான்; ஆனால் அவனுடன் வந்துவிடுவதாகக் கூறிய தோழர்கள் மட்டிலும்ஏனோ, வரவில்லை. அவர்களுக்காக, பக்கத்தில் இடம்கூட பிடித்து வைத்தான். அவர்கள் வரவில்லை; அவள் வந்தாள். அவள் கற்பகமல்ல; காந்தி! அவளுடைய கண்ணோட்டத்தையும், நடிப்பையும் சில சமயங்களில் அவன் கண்டிருக்கிறான். அவள் அவனைக் காதலித்தாள்; அவன் அவளைக் காதலிக்கவில்லை. மாணிக்கம் கடைசியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அது மட்டும் அல்ல, அவனுக்கருகில் காலியாக இடமும் இருந்தது. அவள் நாகரீக முறையில், "இங்கே, உட்காரலாமா?", என்று கேட்டாள் துணிவுடன். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஓ. எஸ் உட்காருங்களேன்" என்றான் தட்டுத் தடுமாறி. "தாங்க்யூ" என்று நன்றிதெரிவித்தாள் உட்கார்ந்துகொண்டே!

அதை அவன் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. அசட்டையாக வாயிலை நோக்கிக் கொண்டிருந்தான்.

கதவுகள் அடைபட்டன; கருப்புத் துணிகள் வெளிச்சத்தை மறைத்தன; படத்திற்குச் சம்பந்தப்படாத பாட்டுகள் பாடின; பின்னர் படம் ஆரம்பமாயிற்று. நாற்காலியின்கையின் மேல் மெதுவாக அவள் முழங்கை ஊன்றிற்று. அவன் கையை 'வெடுக்கென்று' எடுத்துக் கொண்டான்.

மெதுவாக தன் வலதுகையை எடுத்து, அவன் உட்கார்ந்து கொண்டிருந்த நாற்காலியின் சாய்வின்மேல் வைத்தாள். அவன் குனிந்துஉட்கார்ந்தான். அவளுக்கு சலிப்போ, வெறுப்போ ஏற்படவில்லை; அவனுக்கு அறுவெறுப்பு முற்றவில்லை. படம் நடந்து கொண்டிருந்தது. இந்த நாடகமும் நடந்துகொண்

டிருந்தது. உணர்ச்சியற்ற படம்; உயிருள்ள நாடகம். இருட்டறையில் கண்ணுக்குக் வேலையில்லை; கைகளும் வாயும் தான் காதலுண்டு பண்ணும் உபகருவிகள்! அந்த இருட்டறையில் பேச்சைவிட பேராற்றல் வாய்ந்தவை கைகளாகவே இருந்தன.

அவனுடைய அலட்சியபாவம் அவளது காதல் தீயை மூட்டி விட்டது; ஆம், காதல் உண்மையிலேயே நெருப்புதான். காற்று இருந்தாலும் இல்லாவிட்டாலும், அது பற்றுதல், பற்றுப் பொருளைப் பொருத்தது. அதே போல் காதல் காதலிப்பவரின் மேல்கொண்ட ஆழ்ந்த—கட்டுக்கடங்கா ஆசையைப் பொறுத்தது.

ஆண் காதலை வாழ்க்கைக்குப் புறம்பே ஒதுக்கிவைத்து வைக்கிறான். பெண் அதுவே தன் வாழ்க்கைப் போராட்டமாக மேற்கொண்டு விடுகிறாள். இதனால்தான் பெண்களின் காதல் விரைவில் தணிவதில்லை; இது ஆண்களுக்குத் தோன்றுவதில்லை போலும்! பெண், காதலால் எல்லாவற்றையும் அடைந்துவிடலாம் என்று நினைக்கிறாள். இது அவளுடைய தனிப்பட்ட கொள்கை. காதலுக்கு பெண் தன் மதிப்பையே தியாகம் செய்து விடுகிறாள்.

பெண்ணின் வாழ்க்கைச் சரிதை முழுவதும் காதல்மயம் என்ற இலக்கணத்திற்கு இலக்கானவள் காந்தி; மனிதனுக்கு அது வாழ்க்கையின் ஒரு மூலை என்ற இலக்கணத்திற்கு—காந்தியைப் பொறுத்த அளவில்—இலக்கானவன் மாணிக்கம். அவள் அவனை முழுக்க முழுக்க காதலித்தாள்; அதை அந்த சமயத்தில் வெளிப்படுத்தவும் செய்தாள். ஆனால் அவன் மட்டிலும் அவள் காதலுக்கு மதிப்பு தருவதாகத் தெரியவில்லை. காதல்கண்ணீரைச் சிந்தவில்லை; கொதிக்கத்தான் செய்தது. அவன் வெறுப்படையவில்லை; பொருட்படுத்தாமலிருந்தான்.

மாணிக்கத்தின் காதல் வலையின் சுருக்குகள் பெருகின. கன்னி கண்ணியில் விழமாட்டாளா என ஏங்கினான் காதலன். பெண்கள் மென்மையானவர்கள்—அவர்களின் உடல் மட்டிலுமல்ல; உள்ளமுந்தான். அந்த மென்மை கற்பகத்திடம் இல்லையா? அவள் கற்ற கல்வி உள்ளத்தை இறுக்கிக் கட்டியாக்கி விட்டதா? அது இளக்வே செய்யாதா? உடைக்கத்தான் வேண்டுமா?

ஆம். அவள்—கற்பகம்—எப்போதும் போலத்தான் இருந்தாள். மாணிக்கம் என்னென்னவோ முயற்சிகள் செய்து பார்த்துவிட்டான். அவளிடம் ஒருவார்த்தைகூட பேச முடியவில்லை. முதலில் அவள் யாரென்றே அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

உலகம் உருண்டு கொண்டிருந்தது. காலம் நடந்தது.

ஒருநாள் ஊரிலிருந்து கடிதம் வந்தது—கலியாணத்திற்குப் பெண் பார்த்திருப்பதாக! துள்ளிக் குதித்தான்; அக்கடிதத்தின்மேல் சீறினான். அன்று கல்லூரிக்குக் கூடப் போகவில்லை; பதிலும்எழுதவில்லை; வேட்டையையும் குறைத்துக் கொண்டான்; பித்துப் பிடித்தவன் போலிருந்தான்.

விடுமுறை வந்தது. மாமா கூப்பிட்டனுப்பினார்—மற்றொரு கடிதமூலம். சென்றான். இரண்டு நாட்கள் தங்கினான். மூன்றும் நாள் மெல்ல கலியாணப் பேச்சைத் துவக்கினார்: அவனுக்கு ஆத்திரம் வந்தது: அடக்கிக் கொண்டான்.

பேசிக்கொண்டே அவனை அழைத்துக்கொண்டு ஒரு வீட்டிற்குச் சென்றார். அங்கே...... ஆம், அவன் கனவுகாணவில்லை! பிரியும் படச்சுருளின் பிம்பத்தைப் பார்க்கவில்லை. அவன் பார்த்தது கற்பகத்தை. அதே கல்லூரியில் படித்த கற்பகம்! அவனுடைய வியப்பு எல்லையை மீறிவிட்டது. மாமா மாணிக்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அவனுடைய திடீர் மாற்றத்தைக்கண்ட அவருக்கு ஒரு வித 'குஷி' பிறந்து விட்டது.

"வாடா, வீட்டிற்குப் போகலாம்" என்றார். திரும்பிப்பார்த்துக்கொண்டே அவர் பின்னே சென்றான். "அவர் என்னடா" என்ற சிறு கேள்வி கேட்டார்.

"ஆஹா! சம்மதந்தான்" என்றான்.

"என்னடா, சம்மதம்?" என்று கோட்டா பண்ண ஆரம்பித்தார் மாமா.

"ஊ. ஒன்றுமில்லை" என்றான் குழறியபடி.

"என்னடா, ஒன்றுமில்லை. அவளை...பண்ணிக்க என்னடா, சொல்றேண்ணு கேட்டா....." என்றார் மாமா.

"அதுதான், அப்பவே சொன்னேனே"

"ஓஹோ கேள்விக்கு முன்னாலேயே பதில் கொடுத்துவிட்டாயா?"

"பதிலுக்கு முன்னாலேயே கேள்வி கேட்டிருக்கவேண்டும்"

"சரிதான். இவ்வளவு அவசரமா?"

"...ம்...எப்படியாவதுஇதை முடிச்சுடுங்க மாமா" என்று வேண்டினான் மாணிக்கம்.

"அவள் சம்மதம் வேறு இருக்கேடா?"

"நான் அவளைக் காதலிக்கிறேன். மாமா!"

"நல்ல காதல்...அவள் உன்னைக் காதலிக்கிறாளா என்பது தெரியவேண்டாமா?"

"......"

"என்னடா, வாயடைஞ்சு போச்சு."

"கலியாணம் ஆனா[illegible] எல்லாம் காதலிப்பா

"நல்ல புள்[illegible], [illegible]!"

# அவசர அவசரமாகப் பணியாற்றும் ஆளவந்தார்கள்!

"செச்சே! இந்த ஆட்சியாளர்கள் என்ன இவ்வளவு மந்தமாக இருக்கிறார்கள்! எதிலும் சுறுசுறுப்பைக் காணோமே!—விறு விறுப்பாகப் பணியாற்றவோ தெரியவில்லையே—அவசரமாகச் செய்யப்படவேண்டிய வேலைகளைக் கூட அப்படி அப்படியே போட்டு வைத்திருக்கிறார்களே — ஊரும் உலகமும் எவ்வளவு முன்னேறுகிறது—இவர்களோ ஆமை வேகத்தில் நத்தைபோல ஊர்ந்துகொண்டிருக்கிறார்களே—இப்படியிருந்தால் எப்படித்தான் நம் நாடு முன்னேறுவது! எப்போதுதான் இந்த ஆட்சியாளர்களுக்கு, தீவிரமாகப் பணியாற்றும் திரு உளம் ஏற்படுமோ தெரியவில்லையே!" என்றெல்லாம் நாம் நம் ஆளவந்தார்களைப்பற்றி, அடிக்கடி சலிப்புடன் கூறிவந்தோமல்லவா. அவ்வளவும் பொய்யாகிவிட்டது தோழர்களே, பொய்யாகிவிட்டது! ஆளவந்தார்கள் பணியாற்றத் தொடங்கி விட்டார்கள்! வேக வேகமாகப் பணியாற்றத் தொடங்கிவிட்டார்கள்! சீக்கிரம் சீக்கிரமாகப் பணியாற்றத் தொடங்கிவிட்டார்கள்! பணி, ஜரூராக, புயல்காற்று வேகத்தில், ஜாம் ஜாம் என நடந்தபடி இருக்கிறது.

மந்தமான போக்கு மறைந்து, விறு விறுப்பாகப் பணியாற்றும் சுபாவம் ஏற்பட்டு விட்டது.

ஆமை வேகமும் நத்தைபோல் களின நடையும் மறைந்து மின்சார வேகமும் வானூர்தி போல் விரைவு நடையும் உண்டாகிவிட்டது.

தயங்கித் தயங்கிப் பணியாற்றியவர்கள், இப்போது விரைந்து விரைந்து பணியாற்றத் தொடங்கிவிட்டார்கள்.

ஆம்! சென்னை ஆட்சியாளர்கள் இந்த ஒரு மாத காலத்துக்குள்ளாக மடமடவென பலப்பல அடக்குமுறைப் பாணங்களை மக்கள் மன்றத்தின் மீது வீசியிருக்கிறார்கள்.

இந்தப் பாணங்களை வீசுவதிலே அவர்களுக்கு கையும் சலிக்கக் காணோம்! மனமும் சலிக்கக்காணோம்! வீசுகிறார்கள், வீசுகிறார்கள், மேலும் மேலும் வீசுகிறார்கள்! ஒரு அம்புக்குப்பின் மற்றொரு அம்பு, ஒரு சட்டத்திற்குப்பின் மற்றொரு சட்டம் என்ற 'பாணி'யில் புதுப் புது அடக்கு முறைகள் வந்தபடி இருக்கின்றன தொடர்ச்சியாக! ஒன்றன்பின் ஒன்றாக! ஓய்வு ஒழிவு இன்றி!

இன்பத் திராவிடம் என்றோர் புத்தகத்திற்குத் தடைவிதித்தார்கள் என்ற சேதி வந்தது! அந்தச் சேதி நம் காதில் சரியாக வந்து விழக்கூட இல்லை, அதற்குள் திராவிடர் கழக நாடகங்களுக்கு சில ஊர்களில் 144 போட்டுவிட்டார்கள் என்ற சேதி வந்தது! இது என்ன கொடுமை என்று நம் உதடுகள் முணு முணுத்து முடிப்பதற்குள் திருச்சோற்றுத்துறை முதலிய சில ஊர்களில் நம் கூட்டங்களுக்குத் தடை உத்தரவுத்தாக்கீது பிறப்பிக்கப்பட்டது எனக் கேள்விப்பட்டோம். இந்தச் சேதிகளெல்லாம் நம் செவியில் வந்து விழுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் தீட்டிய 'ஆரியமாயை' என்ற புத்தகத்தை அச்சியற்றிய அச்சகத்தார் மீது ரூபா 2000 ஜாமீன் என்ற கட்டிமுனையைப் பாய்ச்சினார்கள் பாராளவந்தவர்கள் என்று தேசிய ஏடுகளில் சேதிவரக் கண்டோம். அந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் "விடுதலை"க்கு ரூபா 10000மும் "திராவிட நாடு" இதழுக்கு ரூபா 3000மும் ஜாமீன் விதிக்கப்பட்டது என்பதை அறிந்தோம். "ஆரியமாயை" உத்தரவு பிறப்பிக்கப் பட்டதன் பின்னரோ "குடி அரசு" ஏட்டிற்கு வேறு ரூபா 3000 ஜாமீன் விதிக்கப்பட்டது. இவ்வளவுக்கும் பிறகு, இந்த வாரம் கடைசியாக, **இலட்சிய வரலாறு** என்னும் அரிய புத்தகத்தைப் பறிமுதல் செய்திருக்கிறார்கள் சென்னை ஆட்சியாளர்கள்.

**இலட்சிய வரலாறு**, அண்ணாவின் தமிழ்நடையின் எழிலுக்கோர் எடுத்துக்காட்டு! அந்த எழில் உருவத்தை இனிதமிழகம்காணக்கூடாதாம்! அந்த இன்பத் தென்றலை திராவிட மக்கள் இனி நுகரக்கூடாதாம்! அந்த கொம்புத் தேனை, நம் அறிவுப் பசியாற நாம் மொண்டு மொண்டு இனி குடிக்கக் கூடாதாம்!

**இலட்சிய வரலாறு**, திராவிட இன உணர்ச்சியும் திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியமும் தோன்றி வளர்ந்த வரலாற்றை எழில்பட இயம்பும் இன்சுவைச் சுவடி. அந்தச் சுவடியை இனி நாம் படிக்கவே கூடாதாம்! படித்து, நம் அறிவை ஆற்றலை, அனுபவத்தை வளர்த்துக் கொள்ளக்கூடாதாம்! சென்னை ஆளவந்தார்கள் இப்படிக் கூறுகிறார்கள்! இவர்களுக்குத்தான் அந்த உன்னத வரலாற்றை உணர்ந்து கொள்ளவேண்டுமே என்ற கவலையோ கருத்தோ இல்லையென்றால் நம்மையும் ஏன் அந்த உயரிய இலட்சியத்தின் வரலாற்றை உணரவேண்டாம் என்று தடுக்கிறார்கள்?

ஏன் தடுக்கிறார்கள்?

ஏன்? ஏன்?

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிதைந்தாலும் தவறில்லை, பெரியாரின் சிறப்பும் செல்வாக்கும் புகழும் மட்டும் சிதையாமல் இருந்தால் போதும் என்பது 'விடுதலை'யின் எண்ணமாக இருந்தாலொழிய பெரியாரின் இன்றைய போக்கை "விடுதலை" ஆதரிப்பதற்கு வேறு காரணமே கிடையாது.

கொள்கையைவிட தலைவரே முக்கியம் என்று "விடுதலை" கருதுகிறது போலும்! எனவேதான் அவருடைய செயல் முற்றிலும் தவறானது என்று தெரிந்தவிடத்தும் கூட அவரை முற்றமுடிய ஆதரித்து நிற்கிறது!

"விடுதலை" எப்படியாவது கருதிக்கொண்டு போகட்டும்! நம்மைப் பொறுத்தவரை, நாம், தலைவரைவிட கட்சியே முக்கியம் என்றும் கட்சியைவிட கொள்கையே முக்கியம் என்றும் திடமாக நம்புகிறோம் எனவே தான் தலைவரின் இன்றைய போக்கை ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்.

இதைக்கண்டு "விடுதலை" க்கு சீற்றம் வரலாம். அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? கொள்கையைவிட தலைவர்தான் முக்கியம் என்ற விடுதலையின் "ஒற்றுமைத் தத்துவத்தை" நம் உள்ளம் ஏற்க மறுக்கிறதே!

# தலைவரைவிட கொள்கையே நமக்குப் பெரிது!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பரைச் சென்று யார் கேட்டபோதிலும், தாமாகவே, தம் விருப்பப்படியே, தம் சொந்த இச்சைப்படியே, வயோதிகரைத் திருமணம் செய்து கொள்வதாகத் தான் கூறுவரேயன்றி, தம் உள்ளத்தில் உறையும் உண்மைக் கருத்தை ஒருவரிடமும் கூறார். இவையும், இவைபோன்ற வேறு பற்பல குறிப்பிடமுடியாத விசேஷ சூழ்நிலைகளாலும், தடுக்கமுடியாத காரணங்களாலும், பல சமயங்களில், பெண்கள், "தாமாகவே" வயோதிகரை மணக்க முன்வருவதுண்டு. ஆனால் மனப்பண்பு விளக்கம் அறிந்த எவரும் இத்தகு திருமணங்களை இந்தக் காரணத்தால் பொருத்தமுள்ள திருமணம்தான் என்று ஒருபோதும் சொல்லிவிடமாட்டார்கள். அப்படிச் சொல்வதைவிட அறியாமை வேறு ஒன்று இருக்கமுடியாது.

இந்த உண்மை மிக நன்றாகத் தெரியும் "விடுதலை" க்கு! தெரிந்த காரணத்தால்தான், "விடுதலை", 31-12-47 அன்று, இத்தகு பொருந்தாத் திருமணங்களைக் கண்டித்து எழுதியபோது, வயோதிகர்கள், விருப்பமில்லாத இளமங்கையரைத் திருமணம் செய்து கொள்வது மட்டும்தான் தவறு என்று எழுதவில்லை. மாறாக, எந்த இளமங்கையரை எந்த வயோதிகர்கள் திருமணம் செய்து கொண்டாலும், அதற்கு எத்தனை ஆயிரம் காரணம் காட்டினாலும் தவறு தவறுதான் என்பதை நன்றாக விளக்கும் தோரணையில், **"சிறு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் கிழவர்கள் சீர்திருத்தம் பேசினால் அது பித்தலாட்டம்தவிர வேறில்லை"** என்று காரசாரமான முறையில் எடுத்துக் காட்டியிருக்கிறது.

31-12-47ல் வயோதிகர்—இளமங்கை திருமணத்தை இவ்வளவு தீரமாக, தீவிரமாக, ஆக்ரோஷத்துடன், கனல் கக்கும் நடையில் கண்டித்த "விடுதலை", இப்போது பெரியார் ஈ. வெ. ரா—மணியம்மை திருமணத்தை அதைவிட ஆக்ரோஷமான முறையில் ஆதரிக்கிறது.

அன்றையதினம், ஒரு வயோதிகர் ஒரு இளமங்கையைத் திருமணம் செய்து கொண்டால் உடனே அதைக் கண்டிக்க வேண்டும், அதுதான் முறை, அதுதான் நியாயம் என்று தோன்றிற்று "விடுதலை"க்கு!

ஆனால் இன்றையதினம், ஒரு பொருந்தாத்திருமணம் நடந்து விட்டால், பெண்ணே "விரும்பி" வயோதிகரை மணந்து கொண்ட திருமணம், மனம் ஒத்த திருமணம், மணம் அல்ல—மணம் என்ற பெயரில் ஓர் ஏற்பாடு, மணம் அல்ல—மணம் என்ற பெயர் படைத்த சில சொற்களின் உபயோகம் என்று ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கு கூறி அத்திருமணத்திற்கு வாழ்த்துரை வழங்க வேண்டியதே தன் கடமை என்று தோன்றுகிறது அதே "விடுதலை"க்கு!

**அன்று அப்படி!**
**இன்று இப்படி!**

என்னே "விடுதலை"யின் விபரீதப் போக்கு!

**"நான் கையெழுத்துப் போடுவது திருமண மனு பாரம் என்பதை மணியம்மைக்குத் தெரிவிக்காமலே அந்த அம்மையிடம் சம்மதக் கையெழுத்து வாங்கினேன்"** என்று பெரியார் 13-7-49 "விடுதலை"யில் எழுதி விட்ட பிறகு, மணியம்மையார் மனப்பூர்வமாக இந்த மணத்திற்கு ஒப்புக்கொள்கிறார்கள் என்பதே சந்தேகத்திற்கு இடமான சேதியாகி விட்டது. மணியம்மையார் மனப்பூர்வமாக இந்த மணத்திற்கு ஒப்புக்கொள்பவராக இருந்தால், அந்த அம்மையாருக்குத் தெரிவிக்காமலே, திருமண மனுவில் கையெழுத்துவாங்கவேண்டிய அவசியமில்லையே! அந்த அம்மையாருக்குத் தெரிவித்தே கையெழுத்து வாங்கியிருக்கலாமே! அதுதானே முறை! அதுதானே சரியான வழி! அதுதானே நியாயமாகச் செய்திருக்கப்படவேண்டிய காரியம்! அதைவிட்டுவிட்டு, "நான் பெரியார் இராமசாமியை மனப்பூர்வமாக மணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன்" என்றுள்ள மனுபாரத்தில், இந்த வாக்கியங்களை அம்மையாருக்குக் காண்பிக்காமலே அந்த அம்மையாரிடம் கையெழுத்து வாங்கினார் பெரியார் என்றால், இதை பெரியாரே வெளிப்படையாகக் கூறவும் செய்கிறார் என்றால், அந்த நேரம்வரை அம்மையார் பெரியாரை மணந்து கொள்ள சம்மதிக்கவில்லை என்றுதானே அர்த்தம்? பிறகு, பெரியார், ஏதேதோ காரணங்களைக் கூறி, அம்மையாரைச் சம்மதிக்கவைத்திருக்கலாம். அது வேறு சேதி.

ஏற்காட்டில் பெரியார் இருந்தபோது, இந்தத் திருமண ஏற்பாட்டைக் கைவிட்டுவிடும்படி அவரைக் கேட்டுக்கொள்ள சென்னையிலிருந்து சென்ற இரண்டாவது தூதுக் குழுவினர் பெரியாரைக்கண்டுபேசிவிட்டு, பிறகு, தனியாக, திருமதி மணியம்மையார் அவர்களைக் கண்டு பேசியபோது, அம்மையார் அவர்கள், "நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். பெரியார் கேட்கவில்லை. வற்புறுத்துகிறார். நான் என்ன செய்யட்டும்" என்று சொன்னார்களாமே! இந்தத் திருமணம் மனப்பூர்வமான திருமணம்தான் என்று இந்த உரையைக் கேட்டபிறகும் நாம் எப்படிக் கூறமுடியும்?

எனவே எப்படிப் பார்த்தாலும், இந்தத் திருமணம் பொருந்தும் திருமணம்தான் என்பது அறிவுக்குப் பொருத்தமான வாதமாக இல்லையே! இந்த நிலையில், இத்தகு திருமணம் செய்து கொள்பவர்கள் சீர்திருத்தம் பேசினால் அது பித்தலாட்டம்தவிர வேறில்லை என்று 31-12-47 ல் எழுதிய "விடுதலை," இன்று, பெரியாரின் பொருந்தாத் திருமணத்தை ஆதரிக்கும் போக்கில் இருக்கிறதே, இது நியாயமா?

அன்று அப்படி! இன்று இப்படி ஏன் இந்த வேறுபாடு! எப்படி வந்தது இந்த மாறுபாடு விடுதலைக்கு?

அன்று, பெரியார், இதுபோல பொருந்தாத் திருமணம் செய்து கொள்வார் என்று கனவுகூடகண்டிருக்காது "விடுதலை" எனவே அன்று பொருந்தாத் திருமணங்களைத் தீவிரமாக தாக்கிஎழுதிற்று. இன்று பெரியாரே, "விடுதலை" யால் அன்று கண்டிக்கப்பட்ட திருமண ஏற்பாட்டை நடைமுறையில் கையாண்டுவிட்டார். எனவே இன்று, பெரியாரை ஆதரிப்பதற்காக தன் கொள்கையைக்கூட விட்டுக் கொடுக்கத் தயாராய் இருக்கிறது "விடுதலை."

தன் இலட்சியங்களிட முன்ன பற்றைவிட, பெரியாரிடம் உள்ள காதல், விடுதலைக்கு அதிகமாக இருந்தாலொழிய, கொள்கை குலைந்தாலும் கவலையில்லை இலட்சியம்

(6-ம் பக்கம் பார்க்க)

# அம்மன் அருள்!

"இராகோ"

நள்ளிரவு! ஒரே இருட்டு. மழை ஓர் மூச்சு நன்றாகப் பொழிந்துவிட்டு அப்பொழுது தான் நின்றிருந்தது. சிற்சில தூற்றல்கள் மட்டும் இருந்தன. எங்கோ தூரத்தில் ஓரிரு நாய்களின் குரைத்தலைத் தவிர மற்றப்படி முழு அமைதி நிலவியது.

அதோ கருப்பாக ஒரு உருவம் அம்மன் கோவில் சுற்றுப்புறத்தின் ஓரமாகவே சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டேசெல்கிறது! அடடே அவ்வளவு உயர்ந்த மதிலை எப்படியோ தாண்டிக் குதித்து விட்டதே உள்ளே! என்ன துணிச்சல்! அதோ இருட்டில் மறைகிறது.

யாரா யிருக்கும்? யாராவது தீண்டப்படாத 'பக்தர்' அம்மனைத் 'தரிசிக்க' வேண்டும் என்ற ஆவலினால் தூண்டப்பட்டுச் சுவரேறிக் குதிக்கின்றாரோ! அதற்கும் இடமில்லையே. அக்கோயில்தான் முன்பேயே தீண்டாதாருக்குத் திறந்துவிடப்பட்டு விட்டதே. திருடனாயிருக்கலாமோ? திருடனுக்கு அம்மன், ஏழை பங்காளி—இவர்கள் வீட்டில் என்ன கிடைக்கும்-? அந்த நேரத்தை யாராவதொரு பணக்கரரன் வீட்டைக் கன்னம் வைப்பதில் செலவழித்தாலாவது ஏதாவது 'பலன்' கிட்ட வழியுண்டு. இருங்கள், ஏதோ முணுமுணுக்கிறானே கேட்போம்:

"ஏழை பங்காளியாம்! ஏழைகள், குடிசையில் அரைவயிற்றை நிரப்ப அல்லற்படும்போது அவர்கள் பங்காளிகளுக்கு இவ்வளவு பெரிய கட்டிடம் ஏன்? வைரநகைகள் ஏன்-? பல்லக்கு ஏன்-? எடுபிடி ஆட்கள் ஏன்-? இவளை ஏழையாக்கி உண்மையிலேயே 'ஏழை பங்காளி' என்ற சொல்லுக்கு ஏற்றவளாகச் செய்யத்தானே இப்பொழுது வந்திருக்கிறேன்"

சரிதான்! சந்தேகமேயில்லை, திருடனேதான்!

பார்த்தால் 'யோக்கியன்' மாதிரி காணப்படுகிறான். திருட்டையே தொழிலாகக் கொண்டவன்போல் தெரியவில்லையே.

ஆமாம்! 'யோக்கியன்' தான் அவன். சுந்தரன் அவன் பெயர். இருந்தாலும் நிலைமை அவனை இவ்வேலைக்கு ஆளாக்கியது. அப்படி என்ன ஒன்றுமில்லாதவனா-ஏழையா என்றால், இல்லவேயில்லை. அவனுக்குச் சொத்து ஏராளமாக இருக்கிறது. பின்னே என்ன-? பைத்தியக்காரனா அவன்! அம்மன் கோவிலில் களவு செய்யத் துணிந்து விட்டான். அல்ல! அவனது சொத்தை அவன் அனுபவிக்க முடியவில்லை. பறி போயிற்று அவன் உடைமை!

அவன் தகப்பனார் அவன் சிறுபிள்ளையாய் இருக்கையிலேயே இறந்துவிட்டார். இறக்கும் பொழுது சுந்தரத்தின் தாய் மாமனிடம் அவனையும், அவன் சொத்துக்களையும் ஒப்படைத்துப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றார். மாமன் அப்பொழுது நல்லவனாக நடித்து வந்தான். பின்னால் தானே சொத்தை 'அபகரிக்க' எண்ணினான். ஏமாந்தார் சொத்துக்கு 'எசமானன்' ஆனகளிப்பில் குடிக்கத் தலைப்பட்டு அழிக்க முற்பட்டான். சுந்தரனுக்கு வயது வளர வளர அவனது உடைமையின் அளவு குறைந்து வந்தது.

இளமை வந்ததும் சொத்தைக் கேட்கப்போக, வீட்டினின்றும் துரத்தப்பட்டான். அந்த அம்மன் கோவில் இவனது சொத்தைக் கொண்டு மாமனால் கட்டப்பட்டது பிறர்சொத்தைக் கவர்ந்த 'பாபத்தை நீக்கப் 'பரிகாரம்'!

சுந்தரன் நாள்தோறும் கோவிலுக்கு வந்து வேண்டிச் செல்லுவான். "தயே! இப்படி நான் நடுத்தெருவில் அலைவது உனக்குப் பிடித்திருக்கிறதா-? வஞ்சிக்கப் பட்டேனே, ஏமாற்றப்பட்டேனே, கண் இல்லையா உனக்கு-? கருணைகொள் என்மீது!"—இதுதான் அவன் வேண்டுகோள். நாளாக ஆக வயிறு சுருங்கி உடல் வற்றினதுதான் 'பலன்'! அம்மனுக்கோ ஊர்வலத்திற்கும், திருவிழாவிற்கும், காணிக்கைப் பெறுவதற்குமாகப் பொழுது சரியாக இருந்தது.

இதற்கு முன்பே தன் காதலை உரிமையாக்கிக் கொண்ட செல்லம். வேறு பணக்காரக் கிழவனுக்கு மண முடிக்கப்பட்டாள். இந்த ஏக்கத்தில் வேறு அலைந்து கொண்டிருந்தான் கந்தரன். சில ஆண்டுகள் இவ்வாறு கழிந்தன.

அன்று அவன் வயிற்றிற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அவனது ஆத்திரமெல்லாம் அம்மன் மீதிருந்தது. தனது சொத்தாலேயே உருவாக்கப்பட்ட அந்த அம்மன் தான் பட்டினி கிடப்பதைக் கண்டு செயலற்றுத் தானே நிற்கிறது! ஒரே முடிவு இதுதான்! அதன் பேரில்தான் அன்றிரவு அம்மன் கோயில் மதிற் சுவரேறி உள்ளே குதித்தான்.

நாற்புறமும் இருட்டு. ஒரே எண்ணெய் வாடை. மெதுவாகக் காலடி எடுத்து வைத்தான்.

"இம்ம்ம்........" என்று சிணுங்கும் ஒலி.

'பகீர்' என்றது அவனுக்கு. மாட்டிக் கொண்டால்......?

ஓரத்தில் பதுங்கினான். சிறிது நேரம் ஒருவிதஒலியுமில்லை. அடுத்த அடி எடுத்து வைத்தான்.

மறுபடியும் "இம்ம்ம்......"

நெஞ்சு விரைவாக அடிக்க ஆரம்பித்தது. மனத்தைப் பிடித்துக்கொண்டு ஒரே மூச்சில் அம்மன் மீதுள்ள நகைகளைக் கழற்றிக் கொண்டு ஓடிவிடலாமென்று முடிவு செய்தான். சிலையை நெருங்கிக் கழுத்திலுள்ள வைர மாலையிற் கைவைத்தான்.

யாருடையதோ காலடிச் சத்தம்......?

இருட்டிலேயே நகர்ந்து அம்மன் பின்னால் ஒளிந்துகொண்டு கவனித்தான். மங்கலான அகல்விளக்கு. ஒளியினூடே ஓர் உருவம், அம்மனை நோக்கி வருவது தெரிந்தது.

அவனையறியாமலேயே அவன் மனம், "ஐயோ! பேயோ! பிசாசோ"—என்று அலறியது. வேறு யார் கோவிலில் அந் நேரத்தில் இருப்பார்கள்—?

'குப்' என்று ஒரே வியர்வை, அவன் உடல் முழுதும். குருதிக் குழாய்கள் அறுந்துவிடுவது போன்ற உணர்ச்சி. நெஞ்சைக் கைகளால் அமுக்கிப் பிடித்துக் கொண்டான்.

உருவம் நெருங்கி வருகிறது. விளக்கொளி அதன் முகத்தில் சிறிது விழுந்தது. ஆம்! ஓர் அழகான இளம் பெண்ணுருவம்! அவனுக்கு யாரோ சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது. கோயிலிலுள்ள 'சாமிகள்' இரவில் வெளியே சென்று உலவிவிட்டு திரும்பும் வழக்க முள்ளன என்று. ஒரு வேளை அம்மன் வெளியே போயிருக்கும் சமயத்தில் தான் நகையைக் கழற்றுவதைத் தெரிந்து கொண்டுதான் திரும்பு கிறதோ என்னவோ! இதற்குதண்டனையோ அம்மன் தனது வேலை எடுத்துத் தன் மார்பில் பாய்ச்சிக் குடலைப் பிடுங்கி மாலையாக...... ...அவன் தலை 'கிர்' என்றது.

அந்த உருவம் கொஞ்ச தூரத்திலேயே நின்று விட்டது. கையைக் கூப்பியது "தாயே என் மீது இரக்கமில்லையா-? நானும் உன் போன்ற பெண்தானே!"

அப்பாடா! சுந்தரனுக்குப் போன உயிர் மீண்டும் வந்தது.

ஒரு பெருமூச்சு விட்டு மனச் சுமையைப்போக்கித்திடப்படுத்திக் கொண்டான். பேயுமல்ல, பிசாசுமல்ல; அம்மன்கூட அல்ல! தன் வர்க்கத்தைச் சேர்ந்த ஓர் மானிடப் பெண் தான்! மேலும் குரல்...... தனக்குப் பழக்கமானகுரல் போன்றிருந்தது!

"தாயே! என் விருப்பத்திற்கேற்ற காதலனைவிட்டு இந்தக் கிழவனுக்குமணமுடித்தார்கள். இவன் பிள்ளையில்லை என்று பூசாரியை கேட்க, அவன் சாந்தி கழிக்க வேண்டுமென்று சொல்ல இந்த நள்ளிரவில் என்னைக் கட்டாயமாக உன் 'சன்னதி'யிலேயே அடைத்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். பூசாரியின் எண்ணம் எனக்குத் தெரிகிறது. என் கிழக் கணவனுக்குத் தெரியவில்லையே! பூசாரி திரும்ப அவர்களை வழியனுப்பி விட்டு வந்தால் என்னைக் காப்பவர் யார்-? நீதான் இரங்கவேண்டும், தாயே!"—என்று கீழே விழுந்து வணங்கினாள் அப்பெண்.

"பெண்ணே! கவலைப்படாதே! நான் இருக்கிறேன்."

அவள் திடுக்கிட்டு எழுந்தாள். பெரிய பெரிய பக்தர்களுக்கெல்லாம் அருள் புரியாத அம்மன் தன் நிலைக்கு இரங்கி எழுந்தருளுகிறது என்று ஆனந்தங் கொண்டாள். குழந்தை தன் தாயை நோக்குவது போல, அன்புடன் கையை நீட்டி "அன்னையே! ஆபத்தில் காப்பாளே......!"

"காப்பவள் யாருமில்லை செல்லம்! காப்பவன்தான் வந்திருக்கிறேன்"—என்று முன் நகர்ந்தான் சுந்தரம். செல்லம் எதிர்பாராத சந்திப்பினால் திகைப் படைந்தாள், அப்படியே உணர்ச்சியற்றுநின்று விட்டாள்.

"செல்லம்! சீக்கிரம் புறப்படு, யாராவது வருவதற்குள்." இருவரும் விரைவாக மதிலேறி வெளியிற்சென்று இருட்டில் மறைந்தனர்.

ஓராண்டு! ஓர் நூறுமைல்களுக்கு அப்பால்! இன்று சுந்தரன் ஓர் சீர்திருத்தப் பத்திரிகையின் ஆசிரியர். சாந்தி கழிக்க வில்லை. அரச மரத்தையோ, பிள்ளையாரையோ சுற்றவில்லை. அவர்கள் மன மொத்த இன்ப வாழ்க்கையில், மேலும் இன்ப மூட்டும் ஒரு செல்வக் குழந்தை பிறந்திருக்கிறது. அவர்கள் வாழ்வு வளம் பெற்றது!

---

12ம் பக்கத் தொடர்ச்சி

மணம் வீசுகிறது! கலை, பண்பாடு இலக்கியம் என்ற வண்ணங்கள் கண்ணைப் பறிக்கின்றன. "தோழமை"—என்ற தேன், பலர் நாவிலே நீரூறச் செய்கிறது. அவர்கள் வாழ்வு மலர் வனமாகக் காட்சியளிக்கிறது.

வீட்டின்பம் (சுவர்க்கம்) வேண்டி விண்ணை அண்ணாந்து பார்க்கும பல்மதப் பக்தகோடிகளை நோக்கி,

"இன்பபுரி மேலே இல்லை, அது வெறும் திறந்த வெளி. 'இன்பபுரி' இங்கே, இதோ முழு உருவில் இருக்கிறது"

என்று பரிவோடும், சற்றுப் பரிகாசத்தோடும் கூறுகிறது இரஷ்யா, கேளாக் காதரும் கேட்கும் அளவுக்கு உரத்த குரலில்!

---


# "மாலை மணி"

(திராவிடர் தமிழ்த் தினசரி)

★

ஆசிரியர் :

அறிஞர்

C. N. அண்ணாதுரை M. A.

★

4—8—49ல் வெளிவருகிறது

## விலை அரை அணா

எல்லா ஊர்களுக்கும்
ஏஜெண்டுகள் தேவை

★

விவரங்களுக்கு:

**"மாலைமணி" பதிப்பகம்,**

2-45, முத்துமாரிச் செட்டித் தெரு,
சென்னை 1.

குறிப்பு:—இதுவரை 500க்கு மேற்பட்ட ஏஜெண்டுகளிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன. மானேஜரின் பரிசிலனைக்குப் பிறகு ஏஜெண்டுகளுக்கு அக்ரிமெண்ட் பாரம் அனுப்பிவைக்கப்படும்.


# திருமணம்

அருப்புக்கோட்டை தோழர் ஆ. சு. ஆறுமுகம் அவர்களின் மகன் தோழர் ஆ. சுப்பிரமணியனுக்கும், கடலையூர் தோழர் ச. சூரியனார் அவர்களின் மகள் தோழியர் கோமதி அம்மையாருக்கும் 8-7-49 அன்று தோழர். அ. கு. சி. சிவ சுப்பிரமணியனார் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் சிறப்புற நடைபெற்றது. இதன் நினைவாக போர்வாளுக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது

[வரப்பெற்றோம். நன்றி.]

# பொருந்தா மணத்திற்குப் புதுப்பொருள் கற்பிக்கிறார்கள் !

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வியை மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள் :—

"ஒரு தாரமிருக்க மறு தாரங்களை ஏற்றுக்கொள்பவர்களும், வீட்டிலே இளம் விதவைகளைப் பூட்டி வைத்திருப்பவர்களும், **சிறு பெண்களைத் திருமணம் செய்துகொள்ளும் கிழவர்களும்**,...பெண் உரிமையைப்பற்றி கரடியாகக் கதறுவார்கள்! பேனாமுனை ஒடியக் கிறுக்குவார்கள்! இவர்களைவிடப் பித்தலாட்டக்காரர்கள், போலி சீர்திருத்தவாதிகள், வேறு யாராவது இருக்க முடியுமா?"

இவ்வளவு தெளிவாக, இவ்வளவு விளக்கமாக, இவ்வளவு காரமாக, இவ்வளவு அழுத்தந் திருத்தமாக, இன்றைய "விடுதலை" கண்டாலே சீறியெழுந்து சினந்துவிடக்கூட அவ்வளவு வெளிப்படையாக, சிறு பெண்களைத் திருமணம் செய்துகொள்ளும் கிழவர்களைக் கண்டித்து எழுதியிருப்பவர்கள் யார் தெரியுமா? கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள், உண்மையாகவா என்று கூறி வியப்புக் கடலில்மூழ்கிடத்தொடங்குவீர்கள், இது நிஜமா என்று பண்பாடக்கூடத் தொடங்கிவிடுவீர்கள்! **ஆச்சரியம் ஆனால் உண்மை! இன்றைய "விடுதலை"க்கு இவ்வளவு எரிச்சலை உண்டுபண்ணும் இந்தக் கேள்விக்கணையைப் பூட்டிய ஏடு, வேறு எதுவுமில்லை, சாட்சாத் இதே "விடுதலை" தான்!** 31-12-47 அன்று, பெண்கள் உரிமையை வலியுறுத்தி ஒரு தலையங்கம் எழுதிற்று "விடுதலை!" அந்தத் தலையங்கத்திலேதான் இவ்வளவு வீராவேசத்துடன், இவ்வளவு திட்டவட்டமாக, வாலிபப் பெண்களை மணந்துகொள்ளும் வயோதிகர்களைத் தாக்கியிருக்கிறது விடுதலை! **இன்றைய தினம்** பெரியார் அவர்கள் செய்து கொண்டுள்ள பொருத்தமற்ற திருமணத்திற்கு அந்த ஊரில் ஆதரவு, இந்த சாமியாரிடம் பாராட்டு என்று எழுதி எழுதி ஆநந்தம் கொள்ளும் இதே விடுதலைதான், அன்றைய தினம், இதேவகைத் திருமணங்களை இவ்வளவு காரமான தமிழ் நடையில் கண்டித்து எழுதி இருக்கிறது!

அன்றலர்ந்த ரோஜா போன்ற இளமங்கை ஒருத்தி நரைத்துத் திரைத்து மூத்துப் பழுத்த வயோதிகரை மணந்து கொண்டாலும், அவர்கள் இருவரும் மனம் ஒத்துப் போய்விட்டார்களா என்பதைமட்டும் கவனித்து விட்டால் போதும், மற்றபடி அது பொருத்தமான திருமணம்தான் என்று இன்று தத்துவார்த்தம் பல பேசி, பொருத்தம் என்பதற்குப்புதுப்பொருள்காணும் "விடுதலை" அன்றையதினம் அப்படியெல்லாம் செய்யவில்லை! பாருங்கள் அந்தநாள் விடுதலையின் அழுத்தந் திருத்தமானவாசகத்தை: **"சிறு பெண்களைத் திருமணம் செய்துகொள்ளும் கிழவர்கள் சீர்திருத்தம் பற்றி காடியாக் கதறினாலும் பேனாமுனையொடியக் கிறுக்கினாலும் அவர்களைவிடப் பித்தலாட்டக்காரர்கள் போலி சீர்திருத்தவாதிகள் யாரும் இருக்க முடியாது."** அவ்வளவுதான் அந்த நாள் வாசகம்! சிறு பெண்களைத் திருமணம் செய்துகொள்ளும் கிழவர்கள் அனைவருமே பித்தலாட்டக்காரர்கள் என்றுதான் "விடுதலை" எழுதிற்றேதவிர, விருப்பமில்லாத சிறு பெண்களைத் திருமணஞ்செய்துகொள்ளும் கிழவர்கள்மட்டும்தான் பித்தலாட்டக்காரர்கள்என்று ஒன்றும்எழுதிவிடவில்லை. எந்த இளமங்கையை எந்த வயோதிகர் திருமணம் செய்து கொண்டாலும், அந்த இளமங்கையே தன்னை விரும்பித் திருமணம் செய்துகொள்வதாகச் சொல்லிக்கொண்டு தான் அந்த வயோதிகர் திருமணம் செய்துகொள்வது வழக்கம். இப்படிப்பட்டபொருந்தாத் திருமணம் நிகழும் காலத்தில் மணப்பந்தலில் எந்தப் பெண்ணும், இந்த வயோதிகக் கணவனை நான் விரும்பவில்லை என்று கூறிடுவதில்லை. அப்படிக் கூறமுடியாதபடியான நிலைமையை எப்படியாவது உண்டுபண்ணிவிட்டுதான், வயோதிகர்கள், இத்தகு திருமண ஏற்பாட்டைச் செய்து கொள்வார்கள். பெண்ணின் பெற்றோர்களைக் கொண்டு மிரட்டுவது என்ற ஆயுதத்தைக் கையாள்வது அல்லது பெண்ணைமட்டும் எப்படியாவது திருமணம் செய்துகொடுத்து விட்டால், வறுமையால் வாடிக் கிடக்கும் பெண்ணின் பெற்றோர்களை வறுமையின் கொடிய அரவணைப்பிலிருந்து மீட்டுவிடுவதாக ஆசைமொழிகூறுவது அல்லது பெண்ணைத்தனக்குத் திருமணம் செய்து கொடுக்காவிட்டால் தனக்குள்ள செல்வாக்கைக் கொண்டு பெண் வீட்டாருக்கு தன்னால் இன்னின்ன கொடுமைகளைச் செய்ய முடியும் என்ற அச்சத்தை ஊட்டுவது முதலான ஏதோ ஒரு வழியைக் கையாண்டு, பெண்ணை தன்னைச் சம்மதித்து மணப்பதாகக் காட்டிக் கொள்வதிலே, இளம் பெண்களை மணந்துகொள்ளும் வயோதிகர்களுக்கு எப்போதுமே ஆசை அதிகம். வறுமைத் தேளால் நித்தநித்தம் கொட்டப்பட்டு, வாடி வதங்கி, இருளும் இடரும் நிறைந்த வாழ்க்கையிலே சுருண்டு கிடக்கும் தன் பெற்றோர்களையும், தன் தம்பிமார்கள் தங்கைமார்கள் முதலானவர்களையும், அந்த வறுமைக் கடலிலிருந்து நல்வாழ்வு எனும் கரையில் கொண்டு சேர்ப்பதற்குரிய ஒரே ஒரு தோணி, தான், தன்னை நாடும், செல்வமும் செல்வாக்குமுள்ள வயோதிகரை மணந்து கொள்வதுதான் என்பதையும், அப்படி மணந்து கொள்வதால் தன் இளமையும் எழிலும் பாழாகியபோதிலும், தன் வாழ்வு பாலைவன வாழ்வாக மாறியபோதிலும், தன் குடும்பத்தார் அனைவரும் பூந்தோட்ட வாழ்விலே உலவிட முடியும் என்பதையும், தான் மட்டும் இப்படி தன் சொந்த வாழ்வைத் தத்தம் செய்துவிட்டு தன் பெற்றோர் நலத்திற்காக வயோதிகச் செல்வரை திருமணம் செய்து கொள்ளாமல், தன் சொந்த காதல் வாழ்வையே பெரிதாக மதித்து இளமை ததும்பும் ஆனால் தன்னைப் போலவே வறுமையில் வாடும் வாலிபன் ஒருவனைத் திருமணம் செய்துகொண்டால் தன் குடும்பம் என்றென்றும் வறுமைப் பாலையில் கிடந்து வாடவேண்டியது தான் என்பதையும் சிந்தித்துப் பார்த்து இந்தக் காரணங்களுக்காக, மனதில் சிறிதும் விருப்பமில்லாத போதிலும் வயோதிகச் செல்வரையே முற்றிலும் விரும்புவதாக நடித்து மனமார விரும்பித் திருமணம் செய்து கொள்வதாகவே, தன் பெற்றோர் உட்பட எல்லோரிடமும் கூறி, வயோதிகச் செல்வரை மணந்துகொள்ளும் பெண்களும் உண்டு, அந்நிலையில், அம் மங்கை

(7-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆய காதலியொடு "ஐயா" உலாவப் புறப்படுவார்.

"கூட ஒரு நாய் இருந்தால் எவ்வளவு "குஷி"யாய் இருக்கும்"—இது பாகுமொழியாள் பகர்வது.

"ஆமாம்! நான்கூட நினைத்தேன்! சரி, கைவசமிருக்கும் அடிமைகளில் இருவரைக் கொண்டுபோய் விலைகூறு; ஒரு அழகான நாய் வாங்கிவா! போ, சீக்கிரமாகத் திரும்பிவா"—இது சீமான் தனது வேலையாள் ஒருவனுக்கு இடும் ஆணை.

"இரண்டு அடிமை" = "ஒரு நாய்"! ஆறறிவுபடைத்த மனிதனுக்கு, உலக உயிர்களின் தலைவனுக்கு, வரப்பெடுத்த கைகளுக்கு, மலை பிளந்த தோள்களுக்கு, பாதாளம் சென்று பசும்பொன் எடுத்த உடலுக்கு, ஈழை அசுத்தம் குப்பை இலையென்னவே தங்கள் தலையில் சுமந்த உயிர்கட்கு, வாழ்வுக்கொவ்வாத இந்த வையத்தை இந்நிலை எய்தப் புரிந்த மாவீரர்கட்கு, ஜார் ஆட்சியின்கீழ் நிலப்பிரபுக்கள் கொடுத்த மதிப்பு இது தான்!

அடிமைகளை வைத்துச் சூதாடுவது பிரபுக்களுக்குப் பெருமகிழ்ச்சி தரும் பொழுது போக்கு.

இந்த நிலையிலே ஏழைகள் புரட்சி மருந்துண்டாலொழியத் தங்கள் வாழ்வு வளம்பெற முடியாதென்ற உண்மையை உணர்ந்தனர். அவர்களுக்குத் தேவையான மருந்தைத் தக்க காலத்திலே கொடுக்கும் மருத்துவனைப்போல லெனின் தோன்றினான்.

19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே மக்கள் கடல் கொந்தளிக்கத் தொடங்கியது. மன்னன் "முடியரசு" எனும் கலத்தை "அடக்குமுறைத்" துடுப்புகளைப் போட்டுக் கவிழாமல் செலுத்திக்கொண்டு வந்தான், கொந்தளிப்பு, இன்றில்லா விட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் மறுநாள் அடங்கும், அமைதியான கடலில் உல்லாசப் பயணம் போகலாம் என்ற நம்பிக்கையுடன்! ஆனால் கொந்தளிப்புக் குறையவில்லை. நாள்தோறும் வளர்ந்தது. இதற்கிடையில் அரசகுடும்பம், பூசாரிக்குழு, முதலாளிக் கூட்டம் இத்தனையும் சேர்ந்தகனத்தில் கலம் அமிழத் தொடங்கியது. அரசனும், அமைச்சர்களும், சமாதானம், அரசியல் சீர்திருத்தம் எனும் "பாய்களை"க் கட்டினர் கலத்தில், அவையெல்லாம் ஏதோ தற்காலிகத் தற்காப்பு தந்தனவேயன்றி மக்கள் உள்ளத்தின் ஆழத்தில் எரிந்துகொண்டிருந்த புரட்சித் தீயை அணைக்கவில்லை.

வையத்து மன்னர்களின் கொடுமையெல்லாம் ஓருருவெடுத்தது போன்ற இரண்டாம் நிகோலசு மன்னன் 1894-ல் முடி பூண்டான்! அவன் கொடுமையின் சின்னம்! அடக்கு முறையின் உரு! ஆணவத்தின் சிகரம்! இரஷ்யாவின் கடைசி ஜார்! ஆனால் கொடுமையில் அதன் முதல் ஜார்!

இவன் தனது ஆளுகையையும் அறிவையும் மனைவியின் பால் ஒப்படைத்தான்! நம்பிக்கையை மதகுரு "ரசுபுட்டீன்" என்பானிடம் வைத்தான்! ரசுபுட்டீன் என்ன நல்லவனா? திறமைசாலியா?...அதுதான் இல்லை. பிறவியில் ஏழை! ஏழ்மை நீக்க ஒரு வழி தேடினான்! குதிரைகளைத் திருடத் தொடங்கினான். இது இரவில் மட்டுமே செய்யக்கூடிய வேலை. இன்னல் அதிகம்! பட்டப்பகலில் பலர் முன்னிலையில் தனது தொழிலை நடத்த ஒரு வழி வேண்டுமென்று சிந்தித்தான். அதற்கும் ஒரு வழி கண்டான். உடனே சந்நியாசியானான். திருடனுக்குக் கன்னக்கோல் எப்படியோ அப்படிப் பயன்பட்டது ரஸ்புட்டினுக்குக் கடவுள் என்ற கருவி. கன்னக்கோல் இரவில் மட்டுமே திருடப் பயன்படும்! ஆனால் கடவுள், இரவு, பகல் என்ற இரு வேளைகளிலும் திருடுவதற்கு ஏற்ற ஆயுதம்! இன்றும் பல நாடுகளில் இரவுத் திருடர்களைவிட இத்தகு பகல் திருடர்களே அதிகம். அவர்கள் தொகை, ஏனைய நாடுகளைவிட நம் நாட்டிலோ—மிக அதிகம்!

ரசுபுட்டீனுக்குத் தாடி வளர வளர பணம், புகழ், செல்வாக்கு அனைத்தும் வளர்ந்தன !அரசனின் ஆதரவும் கிடைத்தது! தனது திட்டத்தில் பூரண வெற்றி கண்டான்! சிங்காதனத்திலே மன்னன்! அவனுக்கு மண்ணுலக இன்பத்தைத் தேவையான அளவிலேதர இராணி ஒரு புறம்! விண்ணுலக இன்பத்திற்கு நுழைவுச்சீட்டுத் தர மதகுரு ரசுபுட்டீன் ஒருபுறம். மன்னனுக்குக் குறைவே இல்லை. ரசுபுட்டீனுக்குப் பொன், பெண்—இரண்டும் ஏராளம். வாழ்வு இன்பக கடல்தான்!

ஆனால் நாட்டின் நிலை?-கூறமுடியாத அளவுககு மோசம்! வறுமையும் அடக்குமுறையும் நாட்டில் தாண்டவமாடின. இவை இரண்டும் சேர்ந்து பெற்ற இன்பக் குழந்தைதான் ரஷ்யாவின் புரட்சி! (1917)

1905-ம் ஆண்டு சனவரியில் ஒரு ஞாயிற்றுக்கிழமை! பீட்டர்சுபக் நகரத் தொழிற்சாலை வேலையாட்கள் ஆயிரக் கணக்கில் பெண்டு பிள்ளைகளோடு கூடினர். "காபோன்" (Gapon) என்ற பாதிரி தலைமையில் ஊர்வலம் மெதுவாக நகருகிறது. உழைக்கும் பட்டாளம் உரிமையும் உணவும் வேண்டுமென்று புறப்பட்டது.

பனிபடர்ந்த சமவெளியின் மத்தியில் வானளாவும் தனது குளிர்கால அரண்மனையில் தங்கியிருந்தான் மன்னன். ஊர்வலம் அரண்மனையை அடைந்தது. அரசன் மாளிகையின் மேலே நின்று கொண்டு காட்சி தந்தான்!

"தெய்வத் திருத்தந்தையே! இந்த ஏழைகளின்வேண்டுகோளுக்குச் செவி சாயுங்கள். தாங்கள் மனமிரங்காவிட்டால் தங்கள் திருமாளிகை முன்னர் இறந்து போவதைத் தவிர வேறு வழியில்லை"—இது அரசனை அண்ணாந்து பார்த்த வண்ணம் தங்கள் பரிதாப நிலையை நேரில் கண்டேனும் அரசன் இரங்குவான் என்ற நம்பிக்கையோடு அந்தப் பட்டினிப் பட்டாளம் எழுப்பிய ஈனக்குரல்!

அரசன் ஒருமுறை கூட்டத்தை முறைத்துப்பார்த்தான். புருவம் மேலே சென்றது. பீரங்கிப் படையை ஒருமுறை நோக்கிவிட்டு விறைப்பாக வலதுகையை நீட்டினான். "சுட்டெரி நாய்களை!"—என்பது அதன் பொருள். பழகிப் போய் விட்டதால் படையினருக்கு அது சொல்லாமலே தெரியும்.

அழுகிற குழந்தைகள், வயிற்றைப் பிசைந்துகொண்டு நிற்கும் தாய்மார்கள், தள்ளாடிக்கொண்டு நிற்கும் கிழவர்கள், நிமிர்ந்த தலை கவிழும் வண்ணம் நின்றுகொண்டிருக்கும் இளைஞர்கள்—இவர்களை நோக்கித்திரும்பின பீரங்கி முனைகள்! "ஐயோ"—என்ற அலறலும் ஆயிரம்பேர் ஆவியும் பீரங்கி முழக்கத்தில் கலந்தன! படுகாயப்பட்டவர் 2000 பேர்! "வறுமை தீர்ப்பாய் மன்னா!" என்றனர் மக்கள் "வறுமையை என்ன வாழ்வையே

தீர்த்துவிடுகிறேன், அது எல்லாத் துன்பத்தையும் தீர்க்கும்"—என் ஜார் மன்னன், சொல்லில் அல்ல, செயலில்.

வெண்பனி படர்ந்த அரண்மனை முன்சதுக்கம் இரத்தம் படிந்து சிவப்பு நிறவெறிக் காட்சியளித்தது! ரஷ்ய வரலாற்றிலே "சிவப்பு ஞாயிறு" என்ற சொல் சிறப்பிடம் பெற்றது! நிகோலாஸ் மன்னன் தனது அழிவுக்கு விதை தூவிவிட்டான். தனது சவக்குழியைத் தானே தோண்டிவிட்டான்!

நாடெங்கும் கிளர்ச்சி மூண்டது. மக்கள் கொதித்தனர்! இளைஞர் உள்ளம் பதைத்தது! அதே ஆண்டு பிப்பிரவரித் திங்களில் அரசனுடைய நெருங்கிய உறவினன் கொல்லப்பட்டான். நிலைமையைச் சமாளிக்கமுடியாத மன்னன் அரசியலிலே ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தான். தேர்ந்தெடுக்கப்பட்ட 'அமைச்சர்குழு' (Duma) நாட்டை ஆளுமென வாக்களித்தான். 1917-ல் புரட்சி ஏற்படும் வரை 4 முறை உறுப்பினர்கள் டூமாவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி நடந்தது.

இதற்கிடையில் 1914-ல் மூண்ட மகா யுத்தத்தில் இரசியா பங்கு கொண்டது. இரஷ்யாவுக்கு ஏராளமான நஷ்டம். நாடெங்கும் அதிருப்தி நிலவியது. 1916-ல் பொது எதிரியான ரசுபுட்டீன் சுட்டுக் கொல்லப்பட்டான். மக்களின் கையை மட்டுமா, இல்லை! வாழ்க்கையையே இறுக்கிப்பிணித்த ஒரு விலங்கு அறுந்தது!

நிலைமை இன்னும் சீர்கெட்டது! போரில் இரஷ்யாவுக்குத் தோல்வி! இலட்சக் கணக்கில் இரஷ்யர்கள் சாவு! நாட்டில் பஞ்சம்! அதனால் பலர் நலிவு! போலீசின் அடக்குமுறை! இதனால் பலருக்குக் கோபம்! "சோவியத்"கள் அரசனுக்கு எதிராகப் பலமாக வேலை செய்தன! மக்கள் மன நிலை குமுறும் எரிமலையாயிருந்தது. எந்த நேரத்திலும் 'தீ' வெளிப்படலாம் என்ற நிலைமை நாடெங்கும் நிலவியது. மதியற்ற மன்னன் போர்க்களத்திலிருந்து கொண்டிருந்தான்.

குமுறிய எரிமலை தீயைக் கக்கியது! 1917 மார்ச்சு 8-ல் பீட்ரோகிராட் நெசவுத் தொழிற்சாலைப் பெண்கள் புரட்சியை ஆரம்பித்தனர்! மாபெரும் புரட்சியின் துக்கத்திற்கு முதற்காரணமாயிருந்தவர்கள் தோகையர்கள்தான்! தெரியாமலா பாரதிதாசன் "தாய்க்குலம், துஷ்டருக்குப் புற்றெடுத்த நச்சரவு" என்று கூறினார்.

புரட்சி நகர் முழுதும் பரவியது! பின்னர் நாடெங்கும் விரிந்தது! வீதி முழுவதும் பரவியது! பின்னர் ஒவ்வொரு வீடுதோறும் புகுந்தது! இறுதியாக மக்கள் உள்ளந்தோறும் அது எட்டிவிட்டது. கண்ணீர் சொரிந்த கண்ணிலே கனல்! செல்வர் தாளேந்தும் கைகளிலே வாள்! பயம் உறைந்த நெஞ்சிலே பழிவாங்கும் ஆவேசம்! தோள்களிலே தினவு, துடிதுடிப்பு! பெருமூச்சு போய், சீற்றம் பிறந்துவிட்டது! ஆண் பெண் குழந்தைகள் அனைவரும் திரண்டனர்! அன்னியரை எதிர்த்தா! அல்ல! தங்கள் சொந்த அரசனை யெதிர்த்து! கொடுங்கோன்மையை எதிர்த்து! அநீதியை எதிர்த்து! உழைக்கின்ற எஃகுத் தோள்கள் ஒன்று பட்டுவிட்டால் அதை எதிர்க்க யாரால் முடியும்? யாரால் முடிந்தது இது வரை? புரட்சி வெற்றிபெற்றது. ஜார் முடி துறந்தான். சிறையில் தள்ளினர் மக்கள்! ஆட்சி டூமாவின் கையிலே ஒப்படைக்கப்பட்டது, இன்னும் மக்கள் கைக்கு அது மாறவில்லை இப்புரட்சி நடந்த 8 மாதங்கள் ஒரே குழப்பம்! கலவரம்! கொந்தளிப்பு! தக்க சமயம் லெனினும் (Trotsky) ட்ராட்சுக்கியும் இரசியா வந்தனர். சோவியத்துக்களை ஒழுங்குபடுத்திப் பலப்படுத்தினர். **அடுத்த நவம்பரில் மறு புரட்சி!** அதன் பலன் மக்களுக்காக மக்களுடைய ஆட்சி; மக்களால்! இரண்டு புரட்சிக்கும் மூலகாரணமாயிருந்தவர் லெனின்! அவர் பலருடைய கை விலங்குகளை உடைத்தார்! கருத்துக் கிடப்பட்டிருந்த தளையைத் தகர்த்தார்! "எல்லாம் அவன் செயல்" என்று மதக்கடலிலே தத்தளித்த மக்களைத் தன்னம்பிக்கைக் கரை கொண்டுவந்து சேர்த்தார். இரசியாவிலே பொதுவுடைமைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார் இன்று பஞ்சம், பட்டினி, மோட்சம், நரகம்—இவை அங்கு பழைய சொற்கள். அவர்கள் வாழ்விலே மகிழ்ச்சி

(9-ம் பக்கம் பார்க்க)


## உயர்ந்த நூல்கள்

### அண்ணாவின் நூல்கள்

| | ரூ. | அ |
|---|---|---|
| சிந்தனைச் சிற்பி | | |
| சிங்கார வேலர் | 0 | 4 |
| அண்ணாவின் பொன் மொழிகள். | 0 | 8 |
| நாடும் ஏடும். | 0 | 6 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 |
| திராவிடர் நிலை. | 0 | 8 |
| தேவ லீலைகள். | 0 | 8 |
| மூலபலம் முறிகிறது | 0 | 8 |

### தில்லை வில்லாளன் நூல்கள்

| | ரூ. | அ |
|---|---|---|
| தங்கத் தாமரை (நாவல்) | 1 | 0 |
| அவள் (நாவல்) | 0 | 8 |

### பிற நூல்கள்

| | ரூ. | அ |
|---|---|---|
| வாழ்கத் திராவிடம் | 0 | 4 |
| கருஞ்சட்டைப்படை | 0 | 3 |
| உலகம்கண்ட திராவிடம் | 0 | 8 |
| குறள்காட்டும் தெய்வம் | 0 | 3 |
| சுதந்திர இந்தியா (நேதாஜி) | 1 | 0 |
| தமிழ் வாத்தியார் | 12 | 0 |
| குடும்ப விளக்கு 1 | 0 | 6 |
| இராமாயணம் நடந்த கதையா. | 0 | 3 |
| திராவிட இந்தியா | 1 | 0 |
| விபசாரிதான் ஆனால் | 0 | 5 |
| ஜமீன் தாரிப்பிரச்சினை | 0 | 5 |

வியாபாரிகள் கழிவு 20%
தபால் செலவு இனாம்
தனிப்பிரதி வேண்டுவோர் முன்பணம் அனுப்புக.

**பாரி நிலையம்**
59 பிராட்வே, சென்னை 1.

## ஏஜண்டு தேவை

மதுரை, கும்பகோணம் ஆகிய இடங்களில் போர்வாள் விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை இன்றே எழுதவும்.

மானேஜர்.


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons.)